# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## IA.No.22/2007 in OS.No.13/2005

PW1–சையத் கமால் பாஷா நாள்.16.03.2026

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

ம.சா.ஆ.1 ஆவணத்தை தன்னுடைய வீட்டில் இருப்பதாக மனுதாரர் தகவல் சொல்லி அவர் வீட்டிலிருந்து கொண்டு வந்து கொடுத்ததை நான் தாக்கல் செய்துள்ளேன். தற்போது மனுதாரர் வீட்டில் அவருடைய உறவினரான முனிராபேகம் என்பவர் இருக்கிறார். ம.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகள் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது. எனக்கு அதிகார ஆவணம் 2021ம் ஆண்டு கொடுக்கப்பட்டது. ம.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சாட்சிகள் யார் என்ற விவரம் எனக்கு தெரியாது. எழுதியவர் வாசுதேவன் என்ற விவரம் தெரியும். இதற்கு முன்பு மனுதாரரின் அதிகார முகவரான சவுகத்அலி என்பவர் இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கும்போது வங்கிகணக்கு செலுத்தியது மற்றும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் தவிர வேறு ஆவணங்கள் கைவசம் இல்லை என்று கூறியுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. ம.சா.ஆ.1 ஆவணம் வழக்கிற்காக தற்போது தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பிராதில் தாவா 1வது அயிட்டசொத்தின் மதிப்பு ரூ.40லட்சம், மற்றும் 2வது அயிட்ட சொத்தின் மதிப்பு ரூ.70 லட்சம், 3வது அயிட்ட சொத்தின் மதிப்பு ரூ.1,30,00,000/– என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2அயிட்ட சொத்து மதிப்பு பிராதில் ரூ.70லட்சம் என்று குறிப்பிட்டு விட்டு ரூ.26,50,000/–த்திற்கு விற்பனை செய்யவேண்டிய அவசியம் என்ன என்றால் என்னுடைய முதல்வர் வெளிநாட்டில் இருக்கிறார், அவர் பவர் பத்திரம்எழுதிகொடுத்துள்ளார். உண்மையில் விற்பனை செய்யப்பட்ட விலை 1ம் எதிர்மனுதாரருக்கு தான் தெரியும். 2002ம் ஆண்டு 1ம் எதிர்மனுதாரருக்கு என்னுடைய முதல்வர் எழுதிகொடுத்த அதிகார ஆவணத்தை 2005ம் ஆண்டில் ரத்து செய்துவிட்டார். 2006ம் ஆண்டு என்னுடைய முதல்வரும், 1ம் எதிர்மனுதாரரும் சேர்ந்து தாவா 2வது அயிட்ட சொத்தை விற்பனை செய்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. 1ம் எதிர்மனுதாரர் மட்டும் தான்

அது விற்பனை செய்துள்ளார் என்று மனுவில் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் 24.08.2006ம் தேதியிட்ட கிரய ஆவணத்தின் ஜெராக்ஸ் நகலில் எழுதிகொடுத்த விவரத்தில் என்னுடைய முதல்வரும், 1ம் எதிர்மனுதார் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னுடைய நிருபணவாக்குமூலத்தில் திருமண மண்டபத்துக்கு முன்புறம் உள்ள இடத்தை விற்பனை செய்த விவரத்தை கூறவில்லை என்றால் சரிதான். அந்த இடத்தை விற்று வங்கி கணக்கை பைசல் செய்யவேண்டும் என்று சொல்லிவிட்டு வங்கியில் செலுத்தாமல் என்னுடைய முதல்வரே அந்த பணத்தை எடுத்துசென்றுவிட்டார் என்றால் சரியல்ல. அந்த இடத்தை விற்றது சம்மந்தமாக என்னுடைய முதல்வர் மீது 1ம் எதிர்மனுதாரர் மு.வ.எண்.109/2012 வழக்கு தாக்கல் செய்தவிவரம் எனக்கு தெரியாது. அந்த வழக்கில் 1ம் எதிர்மனுதாருக்கு சேர வேண்டிய தொகையை கிரயம் பெற்றவர் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. அந்த வழக்கில் பிரதிவாதிகளுக்கும் மற்றும் சொத்தை கிரயம் வாங்கியவர்கும் ஒரே வழக்கறிஞர் தான் ஆஜராகியுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. என்னுடைய முதல்வரின் முந்தைய அதிகாரமுகவர் 1ம் எதிர்மனுதாருக்கு சேரவேண்டிய ரூ.42,00,000/−த்திற்காக சங்குபேட்டையில் உள்ள காம்ளக்சை 1ம் எதிர்மனுதாரர் அடையவேண்டும் என்று சாட்சியத்தில் கூறியுள்ளாரா என்று எனக்கு தெரியாது. 1ம் எதிர்மனுதாரர் அவருடைய கள்ளக்குறிச்சி இடம் மற்றும் 1 1/2 கிலோ நகை மற்றும் வாலிகண்டபுரம் வீட்டை விற்று வங்கி கடனை பைசல் செய்தார் என்றால் சரியல்ல. வங்கி கடனுக்கு என்னுடைய முதல்வர் எந்த பணமும் செலுத்தவில்லை என்று முந்தைய முகவர் வாக்குமூலம் கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. முந்தையமுகவர் சவுகத்அலி சொத்தை வங்கி ஏலத்துக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று கடிதம் எழுதியுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. 1ம் எதிர்மனுதாருக்கு ரூபாய் 1கோடியோ 3லட்சம் செட்டில் செய்வதாக நாங்கள் ஒப்புக்கொண்டோம் என்றால் அன்றே முடித்துகொண்டால் அவ்வாறு செய்துகொள்ளலாம் என்று சொன்னோம்.

சொத்தை சரிசமமாக பிரித்துக்கொள்ளவேண்டும் என்று சொன்னோம். மேற்படி 1கோடியே 3லட்சம் மதிப்பிற்கு அன்றைய மதிப்பிற்கு ஒதுக்கவேண்டும் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரரின் கையெழுத்தை சார்பதிவாளர் அலுவகத்தில் போலியாக போட்டதாக என்னுடைய முதல்வர் மீது ஒரு குற்றவியல் வழக்கு உள்ளது என்றால் ஒரு வழக்கு உள்ளது. போலியாக கையெழுத்து போட்டது வேறு ஆளாகும். வங்கிகடன் முழுவதையும் 1ம் எதிர்மனுதாரர் தான் செலுத்திமுடித்தார் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.1 ஆவணம் வழக்கிற்காக தயார்செய்யப்பட்டது என்றால் சரியல்ல. உண்மையில் ம.சா.ஆ.1 ஆவணம் எழுதப்பட்டிருந்தால் அசல் வழக்கு நிலுவையில் உள்ள காலத்திலேயே தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:**

இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.